நான் வளர்த்த - என்னை வளர்த்த 'அன்பகம்' - புதுப்பொலிவுடன்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூன் 5–

நான் வளர்த்த, என்னை வளர்த்த அன்பகம் புதுப் பொலிவுடன் திகழ்கிறது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்த நாளை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் தலைமையகமான அன்பகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 75 அடி உயர கம்பத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடியை கழகத் தலைவர் – முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்து தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளைத் திறந்துவைத்து, அன்பகத்தின் முதல் தளத்தில் புதுப்பிக்கப்பட்ட அலுவலகத்தையும் திறந்துவைத்து, இளைஞர் அணி மேற் கொண்டுவரும் ஆக்கப்பூர்வமான பணிகளைப் பார்வையிட்டார். ஏற்கெனவே புதுப்பிக்கப்பட்ட இரண்டாவது தளத்திற்கும் சென்று, அங்கு நடை பெறும் பணிகளையும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவு வருமாறு:

நான் வளர்ந்த – என்னை வளர்த்த அன்பகம் புதுப்பொலிவுடன்

@dmk_youthwing புதுவேகத்துடன் – புதிய இளைஞர்களைக் கொள்கையோடு வளர்த்து, வெற்றியை நமதாக்கட்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி புளியங்குடி கலைஞர் திடலில் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் வாசு, சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பங்கேற்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரையாற்றினார்.உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு நகர செயலாளர்கள் அந்தோணிசாமி, நாசுர் கனி,பொதுக்குழு உறுப்பினர் வேலுச்சாமி பாண்டியன்,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம் உள்ள கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

சரியான ஆட்சியை நடத்துவதற்கான வழிமுறைகளைதான் அறியணுமே தவிர தி.மு.க.வை குறை சொல்லிக் கொண்டே

சட்டம் ஒழுங்கு பிரச்சினையை திசை திருப்புவதா?

தென்காசி- வாசுதேவநல்லூரில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கேள்வி!

தென்காசி.ஜூன்.5.

திராவிட முன்னேற்றக் கழகத்தையே குறை சொல்லிக் கொண்டிருப்பதனால் மக்கள் இங்கே நடந்து கொண்டிருக்கக் கூடிய தவறுகள், சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளை எல்லாம் மக்கள் விடமாட்டார்கள்.என தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் கழக துணை பொதுச் செயலாளரும்,கழக நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க.சார்பில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள நிலையில் வாசுதேவநல்லூரில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளரும்,கழக நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பங்கேற்று சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார். முன்னதாக சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

ஒன்றிய அரசு 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தைச் செயல்படுத்தத் தீவிரம் காட்டி வருவது குறித்த கேள்விக்கு, அவர் ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் (JPC) அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.அந்த அறிக்கை முறையாகத் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே, இது குறித்து முழுமையான கருத்துகளைத் தெரிவிக்க முடியும் திரும்பத் திரும்ப தி.மு.கவை விஜய் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார் என்ற கேள்விக்கு அவர்கள் இன்னைக்கு ஆளுங்கட்சியில் இருக்கிறார்கள், அவர்கள் சரியான ஆட்சியை நடத்துவதற்கான வழிமுறைகளை தான் அறியணுமே தவிர,திராவிட முன்னேற்றக் கழகத்தையே குறை சொல்லிக் கொண்டிருப்பதனால் மக்கள் இங்கே நடந்து கொண்டிருக்கக்கூடிய தவறுகள்,இங்கே நடந்து கொண்டிருக்கக் கூடிய சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளை எல்லாம் மக்கள் மறந்து விட மாட்டார்கள்.

தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு பிரச்சினை எப்படி இருக்கிறது என கேட்டதற்கு செய்தியாளர்காளன உங்களுக்குத்தான் நன்றாக தெரியுமே என பதில் அளித்தார்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் யு.எஸ்.டி.சீனிவாசன், பரமகுரு,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், புனிதா, வாசு ஒன்றிய குழு தலைவர் பொன்.முத்தையா பாண்டியன், தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் அன்புக்கரசு, பேரூர் செயலாளர்கள் ரூபி.பாலசுப்பிரமணியன் கே.டி.சி.குருசாமி, மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் பொன்னுதுரைச்சி உள்பட பலர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.